ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தூமணி மாடம்

லௌகிக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கான மாத இதழ்

மாடம் 2 மே 2003 ரூ.5 விளக்கு 5

## தெரியுமா இவரை?

இவர் ஒரு கிறிஸ்தவ–வைணவர். அதாவது வைணவ–கிறிஸ்தவர். பெயர் D.A. ஜோசப். கிறிஸ்தவ பணக்காரரின் மகனாக மதுரையில் பிறந்து முதுநிலைப்படிப்போடு சமஸ்கிருதமும் பயின்றார். சமஸ்கிருதப் படிப்பு இவரை இந்து மதத்தின் மேல் குறிப்பாக வைணவத்தின் மேல் ஈடுபாட்டை உண்டாக்கியது. புலால் உண்ணாமை போன்ற கொள்கைகளைக் கைக்கொண்டு, வைணவப் பிரசாரம் செய்யலானார்.

ஸ்ரீபெரும்பூதூர் ஜீயர் ஸ்வாமி இவரைப் பாராட்டி ஒரு வேண்டுகோள் விடுத்தார். ‘கடைசிவரை நீ கிறிஸ்தவனாகவே இரு. எந்தக் காரணம் கொண்டும் உன் பெயரிலோ, உடையிலோ, உருவத்திலோ மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளாதே. அதுதான் உன்பலம்’ என்பதே அது.

அவரது வேண்டுகோளை ஏற்று இன்றும் கிறிஸ்துவராகவே இருந்தாலும் வைணவராகவே வாழ்கிறார். பெருமாளையே வழிபடுகிறார். தன் வழியிலேயே குடும்பத்தையும் கொண்டு செல்கிறார்.

‘நம்மாழ்வார் வைபவம்’, ‘தர்மகீதை’, ‘ஏகாதசி மகிமை’ போன்ற பல தலைப்புகளில் கேஸட்கள் கொடுத்துள்ளார்.

‘கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டியா?’ போன்ற தலைப்புகளில் இவர் எழுதியுள்ள புத்தகங்கள் பல சைவ, வைணவப் பெரியோர்களால் வரவேற்றுப் பாராட்டப்பட்ட நூல்கள்.

எளிய இனிய தமிழில், ஆரவாரமின்றி ஓடும் அமைதியான நதிபோல் சொற்பொழிவு செய்கிறார். கூட்டமும் மெய்மறந்து கேட்கிறது.

ஸ்ரீ ஜோஸப்பின் நூல்கள், கேசட்டுகள் பற்றி அறிய விரும்புவோர் இந்த விலாசத்துக்கு எழுதலாம் :

ஸ்ரீ ஜோசப், 18, 4வது கிராஸ், ரெயின்போ நகர், புதுச்சேரி – 11.

–நன்றி : தினமலர்

● ● ●